புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
SACRED HEART RESEARCH PUBLICATIONS December 2023
Vol:07, Issue: 03 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது: நவம்பர், 2023 – வெளியிடப்பட்டது: டிசம்பர், 2023 ISSN: 2456-821X

# செவ்விலக்கியங்களில் தமிழர் நம்பிக்கைகள்

*முனைவர் வ. மணிகண்டன்,*
*உதவிப் பேராசிரியர்,*
*தமிழ் முதுகலை & ஆய்வுத்துறை,*
*புதுக்கல்லூரி,*
*இராயப்பெட்டை, சென்னை – 14.*

*முன்னுரை*

*ஒரு சமூகத்தின் பண்பாட்டு மரபை அறிந்துகொள்ள உதவுவது அச்சமூகத்தின் நம்பிக்கைகளாகும். இவைகள் மக்களின் தேவைகளுக்காக மக்களால் உருவாக்கப்பட்டவை. இத்தகைய நம்பிக்கைகள் காலம் காலமாகத் தொடர்ந்து வருவதை நம்மால் காணமுடிகிறது. நம்பிக்கைகள் பெரும்பாலும் மனிதனின் அச்ச உணர்வினை அடிப்படையாகக் கொண்டு தோன்றியதாகக் காணப்படுகின்றன. நிமித்தம், கண்துடித்தல், விரிச்சி கேட்டல், நல்லநேரம் பார்த்து செயலைத் தொடங்குதல், சகுனம், வண்டு ஒலித்தல், தும்மல், பேய் பற்றி நம்பிக்கை, ஆழி, கூடலிழைத்தல் போன்ற நம்பிக்கைகளை செவ்விலக்கியங்களின் வழி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

*நம்பிக்கைகள்*

*நம்பிக்கைகளில் முக்கியமானது “சகுனம்” (நிமித்தம்) ஆகும். நாம் மேற்கொள்ளும் செயலின் விளைவை முன்னரே அறிந்து கொள்வதும் அவற்றில் வெற்றி கிடைத்தால் நன்மையாகவும், தோல்வி கிடைத்தால் தீமையாகவும் கருதுவதாகும். இத்தகைய சகுனங்களை சில ஒலிகளின் மூலம் சில குறியீடுகளின் வாயிலாக முன்பே உணர்த்துவதாகும்.*

*“நம்பிக்கைகள் ஒரு சமுதாயத்தின் அறிவு வளர்ச்சியையும், பண்பாட்டு, கலாச்சாரத்தையும் புலப்படுத்தும் களமாக அமைகின்றன.” (கோமதி சங்கர், சமூகவியல் நோக்கில் நீதி இலக்கியம், ப. 45.) என கோமதி சங்கர் கூறுகிறார்.*

*வரும் பொருளை உரைப்பதே நிமித்தம் எனப்படுகிறது. தொல்காப்பியர் நிமித்தம் என்ற சொல்லை பல இடங்களில் கையாண்டாலும் வரும்பொருள் உணர்த்தற்குரிய நிமித்தம் என்றே கூறுகிறார்.*

*“வாழ்வில் பின் நிகழ்விற்கும் நன்மை தீமைகளை சில குறியீடுகளின் வாயிலாக முன்னுணர்த்துவது நிமித்தம்?” (கா. காந்தி, தமிழர் பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும், ப. 109.) என்று கா.காந்தி கூறுகிறார். ஒரு செயலை நன்று செய்து முடித்தற்குரிய சூழ்நிலையை நோக்கி செயல்படுவதும் நிமித்தம் ஆகும்.*

*“நிமித்தம் என்பதற்கு அடையாளம், காரணம், பொருட்டு, சகுனம்” என்றும், “சகுனம் என்பதற்கு கிழங்கு, சேம்போத்து, பறவை நிமித்தம், பேராந்தை;” என்றும் கழகத் தமிழகராதி பொருள் கூறுகிறது. நிமித்தங்கள் மக்களின் சமய நம்பிக்கைகளின் குறியீடுகளாக இருக்கின்றன.*

*நிமித்தம்*

*நிமித்தம் என்பது பின்னர் நிகழும் நன்மைத் தீமைகளை முன்னரே அறிவிக்கும் குறியாகும். பறவை நிமித்தம் பார்த்தலும், விரிச்சி கேட்டலும், நல்லநேரம் பார்த்து செயலைத் தொடங்குதலையும் வழக்கமாகக் கொண்டார்கள். இதைத்தான் தொல்காப்பியர்,*

*“நாளும் புள்ளும் பிறவற்றின் நிமித்தமும்” (தொல்., நூ.1037)*

*என்கிறார்.*

சங்க நூல்களுள் நிமித்தம் என்ற சொல்லாட்சி பயன்படுத்தப்பட்டுள்ளது. நிமித்தம் - நன்மை, தீமை ஆகிய இரண்டையும் உணர்த்துவதாக அமைகிறது.

சங்க இலக்கியங்களில் சகுனம் என்ற சொல்லாட்சி காணப்பெறவில்லை. அஃறிணைப் பொருள்களைக் கொண்டே நிமித்தம் அறிதல் காணப்படுகின்றன. அது மனித இனத்தின் அறியாமையை எடுத்துக்காட்டும் விதமாக அமைந்துள்ளது.

கண் துடித்தல்

பெண்களுக்கு இடது கண்ணும் ஆணுக்கு வலது கண்ணும் துடித்தால் நன்மை என்றும் மாறித் துடித்தால் தீமை என்றும் கொண்டனர்.

" பல்லியும் பாங்கொத் திசைத்தன
நல்லெழில் உண்கறும் ஆடு லிடனே" (கலித். 77)

என்ற பாடல் வரியில் பல்லியும் இடக்கண் துடிப்பும் நன்மை உணர்த்தியச் செய்தியை எடுத்துக் காட்டுகிறது.

மகட்கொடை வேண்டித் தலைவன் அனுப்பிய பெரியோர்க்குத் தலைமகளின் தமர் உடன்படாமைக்கண்டு தலைமகள் வருந்துகிறாள். அப்போது தோழி தனக்கு நன்னிமித்தம் தோன்றியதால் தலைவன் விரைந்து வருவான் எனத் தலைமகளை ஆற்றுப்படுத்தி,

"நுண்ஏர் புருவத்த கண்ணும் ஆடும்
மயிர்வார் முன்கை வளையும் செறூஉம்" (ஐங். 218)

முன்கை வளையல்கள், உடல் பருத்தலால் இருக்கமாகிறது என்பதை ஓர் அறிகுறியாகவும், இடதுகண் துடிப்பதை ஓர் அறிகுறியாகவும் கொண்டு நிமித்தமாக நம்பினர். அது உளவியல் அடிப்படையுடன் உலக இயற்கையையும் ஒட்டியது என்பதைக் குறிஞ்சிப் பாடலடிகள் எடுத்துக்காட்டுகின்றன.

இடக்கண் துடித்தால் பெண்ணுக்கு நல்லது என்பதை,

"ஆற்றலுடைய னரும்பொறி நல்லூரன்
மேற்றுச் சிறுதாய காய்வஞ்சி - போற்றுருவிக்
கட்டக முத்திற் புதல்வனை மார்பின்மேற்
பட்டஞ் சிதைப்ப வரும்" (ஐந். எ. 41)

என்ற ஐந்திணை எழுபது பாடல் விளக்குகின்றது. இடக்கண் துடிப்பது, நற்கனவு காண்பது, பல்லி ஒலிப்பது அக்காலத்தில் நல்ல நிமித்தங்களாக நம்பப்பெற்றன.

பறவை நிமித்தம் பார்த்தல்

பறவை நிமித்தம் பார்த்து செயல்பட்டமைக்கு,

"நாள் அன்றுபோகி, புள் இடை தட்ப,
பதன் அன்றுபுக்கு, திறன் அன்று மொழியினும்"
(புறம். 124:1-2)

என்ற புறநானூற்றுப் பாடலே சான்றாக அமைகிறது.

விரிச்சி கேட்டல்

போர் மீது சென்ற தலைவன் எப்போது வீடு வருவான் என்று முதுபெண்டிர் கோயிலில் விரிச்சி (சகுனம்) கேட்டல் முல்லைப்பாட்டில்,

"முதுபெண்டிர் விரிச்சி நிற்ப" (முல்லைப்பாட்டு, 11 வரி)

என்பதனால் அறியக் கிடக்கின்றது.

நல்லநேரம் பார்த்து செயலைத் தொடங்குதல்

மன்னர்கள் போருக்குச் செல்வதற்கு முன்னர் தன் வெண்கொற்றக் குடையினையும், வாளினையும் நல்ல நாள் பார்த்து புறப்படச்செய்வர் என்பதை,

"குடையும் வாளும் நாள் கோளன்றி
மடையமை ஏணிமிசை மயக்கமும் கடைசிச்
… … … … …… ………………………
அகத்தோன் வீழ்ந்த நொச்சியும்"
(தொல்.பொருள், புறம்.நூ.70)

என்று தொல்காப்பியர் புறத்திணை நூற்பா மூலம் எடுத்துரைக்கிறார்.

அக்காலத்தில் பயணம் செய்கின்றவர்கள் நிமித்தம் பார்த்துச் செல்லும் பழக்கம் இருந்திருக்கிறது. இதனை,

"புலரி விடியல் புள் ஓர்த்துக் கழிமின்" (மலை. 448)

என்ற பாடலடி எடுத்துரைக்கிறது.

மனித நம்பிக்கையின் அடிப்படையிலான நிமித்தம், நிகழப்போவது யாது என்றுணரா நிலையில் மனித எண்ணத்திற்கு எட்டா நிகழ்வுகளை உணர்த்துகிறது.

சகுனம்

அகராதிகள் சகுனம் என்பதற்குப் பறவை, நிமித்தம், கிழங்கு, குறி, துன்னிமித்தம் என்ற பொருள்களைத் தருகின்றன. "நன்மை, தீமைகளை முன்னறிவிக்கும் அறிகுறிகள்தான் சகுனங்கள்" என்கிறது அபிதான சிந்தாமணி. இதை ஆங்கிலத்தில் Omen என்பர். உலகில் பல மக்களிடையே இச்சகுனம் பார்க்கும் பழக்கம் இருப்பதாகக் கூறுகின்றனர். இச்சகுனங்களைச் சுபசகுனம் (Good Omen), அபசகுனம் (Bad Omen) என இருவகையாகப் பிரிப்பர்.

"ஒருவர் தமக்குத் தாமே தன் எதிரில் நிகழும் இயற்கை நிகழ்ச்சிகளால் அறிந்து நடக்கப்போகும் நன்மை தீமைகளைக் கணித்துக் கொள்வது சகுனமாகும்." (முருகு. இராஜேந்திரன், சகுனம் பார்ப்பது எப்படி?, ப. 5.) என்று முருகு இராஜேந்திரனும், "மனிதன் ஆற்றப்புகும் செயல்களுக்கும், இயற்கையின் நிகழ்வுகளுக்கும் ஒருவிதத் தொடர்பு இருப்பதாக மனிதமனம் கற்பித்துக் கொண்ட நிலையில் நிமித்தக்கூறுகள் உருவாகத் தொடங்கின. காலப்போக்கில் வாழ்வியலில் தொடர்ந்து நிகழ்ந்த நிகழ்ச்சிகளோடு அவ்வியற்கை நிகழ்வுகளை இயைத்து நோக்கப்பட்ட நிலையில் அவை சகுனங்களாக வடிவெடுத்தன" (கா. காந்தி, தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும், ப. 109.) என்று கா. காந்தியும் கூறுகின்றார்.

வண்டு ஒலித்தல்

தட்டான் தாழ ஒலித்தால் மழைவரும் என்ற சகுனம் இன்று மக்களிடையேயுண்டு. சங்ககாலத் தலைவி கணவனருகில் கவலையுற்றிருக்கையில் எப்போதும் நண்பகலில் ஒலிக்காத வண்டுகள் அப்பொழுது ஒலிக்கின்றன. இதுகேட்க மேலும் வருந்திய தலைவி,

"நடுநாள் வந்து தும்பியும் துவைக்கும்" (புறம், 280)

எனத் தனக்கு அபசகுனம் நேர்ந்ததைக் குறிப்பிடுகிறார்.

இதனால் பகலில் வண்டுகள் ஒலிப்பதைச் சகுனமாகக் கருதியுள்ளமையை அறிய முடிகிறது.

வினை நிகழ்த்துவோர் அதன்முடிவை முன்கூட்டியே அறிய விழையும் உளவியல் தன்மையால் புறத்தே நிகழும் நம்பிக்கையின்பால் ஏற்படுத்திக்கொள்ளும் முடிவுகள் சகுனங்களாகின்றன. இச்சகுனங்களைச் சுபசகுனம், அபசகுனம் எனப் பிரித்துக் காணமுடிகிறது. சங்க காலத்திலும் தமிழரிடையே சகுனம் பார்க்கும் பழக்கம் இருந்ததைச்செவ்விலக்கிய நூல்களின் வழி அறியமுடிகிறது.

திருமண நிகழ்வு

குடம், மண்டை

சங்க இலக்கிய நூலான அகநானூற்றில் பண்டைய தமிழரின் திருமணச் சடங்கு பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. அத்திருமண நிகழ்வில் 'திருமணம் நிகழும் வேலையான விடியற்காலையில், முதிய மங்கள மகளிர், தலையில் நிறைநீர்க் குடத்தினைச் சுமந்தவர்களாகவும், கைகளில் புதிய அகன்ற மண்டை என்னும் கலத்தினை ஏந்தியவராய் ஒருங்கு கூடினர் (அகம். 86:8-9) என்ற இந்த நிகழ்வினை நோக்கும் போது திருமணச் சடங்கல் புதிய மண்குடங்களின் பயன்பாட்டினைப் பற்றி அறியமுடிகின்றது. எவ்வளவு தான் நாகரீக வளர்ச்சியை அடைந்தாலும் இன்றைய காலங்களிலும் நடக்கும் திருமணங்களில் மண்குடங்கள் சார்ந்த நிகழ்வினைக் காண முடிகிறது. இதனைச் சங்கத் தமிழரின் பண்பாட்டு நீட்சியாகவே கொள்ள முடிகிறது.

*பல்லி சொல் கேட்டல்*

*பல்லி செல் கேட்டுத் தம் தலைவன் திரும்புவதை எதிர்ப்பார்த்தனர். நற்றிசையில் ஒலித்தால் நல்ல சொல் என்றும், நல்லது நடக்கும் என்றும் கொண்டனர். கணிவாய்ப் பல்லி, முதுவாய்ப் பல்லி என்று அகநூல்கள் குறிப்பிடும்.*

*"மையல் கொண்ட மதனழி இருக்கையன்*
*பகுவாய்ப் பல்லி படுதொறும் பரவி*
*நல்லகூறு என நடுங்கி" (அகநானூறு 289 :14 – 16)*

*என அகநானூறு கூறுகின்றன.*

*மழைப் பற்றிய நம்பிக்கை*

*வெள்ளி தென்திசை ஏகின் மழை பொழியும். (பதிற். 13) என்றும் வடதிசை மாறி வறங்கூரும் (புறம் 35, 388) என்றும் கோள் நிலை கொண்டு நம்பினர். இது அறிவியல் அடிப்படையில் உண்மை ஆகலாம். ஆயின், நல்ல அரசாட்சி, அருளாளர் தொண்டு,பத்தனிப் பெண்டிர் எனும் முத்திறத்தாலும் மாதம் மும்மாரி பெய்யும் என்றும் இந்திரனுக்கு விழா எடுத்தால் மழை பொழியும் என்றும் நம்பினர்.*

*கண்ணூறு*

*இது பேய்களைப் பற்றி நம்பிக்கையோடு தொடர்புடையது. இவ்விருபதாம் நூற்றாண்டிலும் இந்நம்பிக்கை தமிழ் மக்களிடம் நிலவுகிறது. இந் நம்பிக்கை உலக முழுவதிலும் உண்டு. குறமகள் கண்ணினால் ஏற்படும் ஊறுகளைத் தீர்ப்பதற்கு நெய்யுடன் வெண்சிறுகடுகையும் தூவுவாள் என்பதை,*

*"நெய்யோடு ஐயவி யப்பி"(திருமுருகு. 228)*

*என்ற பாடல் வரி சுட்டிக் காட்டுகின்றன.*

*தும்மல்*

*தும்முதல் எனும் செயல் மூலம் தன்னை விரும்புபவர்கள் நினைக்கிறார்கள் என்று தமிழ்மக்கள் நம்பினர். தும்மலை நிமித்தமாகக் கொண்டதற்கானச் சான்று சங்க இலக்கியத்தில் காணப்படவில்லை. ஆனால் இன்றைய தமிழ் மக்களின் நடைமுறை வாழ்வில் தும்மலைச் சகுனமாகக் கொள்ளும் போக்கு காணப்படுகிறது.*

*தும்மினால் பிறர் நினைப்பதற்காக எனக் கருதும் நிலையினை,*

*"தும்முச் செறுப்ப அழுதாள் நுமர்உள்ளல்*
*எம்மை மறைந்திரோ என்று" (குறள். 1318)*

*என்ற குறளில் தெளிவாகக் காணமுடிகிறது.*

*இன்றும் தும்மலைச் சகுனமாகக் கொள்ளும்போக்கு தமிழ்மக்களின் வாழ்க்கையில் நிலைபெற்றுள்ளது. தும்மல் தொடர்ந்து வந்தால் தும்முபவரைத் தொலைவிலுள்ள உறவினரோ நண்பர்களோ நினைப்பதாக எண்ணுவதாகவும் அதனை நன்மை தீமைகளை உணர்த்தும் சகுனங்களாகக் கருதுவதும் வாழ்வில் காணமுடிகின்றன.*

*தும்மல் வந்தால் ஆள்நினைவு என்று குறிப்பிடுவதை,*

*"ஒல்லோமென் றேங்கி யுயங்கி யிருப்பளோ*
*கல்லிவ ரத்த மரிபெய் சிலம்பொலிப்பக்*
*கொல்களி றன்னான்பின் செல்லுங்கோ லென்பேதை*
*மெல்விரல் சேப்ப நடந்து" (ஐந். எ. 40)*

*என்ற ஐந்திணை எழுபது பாடல் எடுத்துக்காட்டுகின்றன. அடுத்தடுத்து தும்மல் வருகிறது எனவே தலைவன் திரும்பி வருகிறான் என்ற நற்செய்தியை அறிவிப்பதாகும்.*

*வினையின் காரணமாகத் தலைமகளைப் பிரிந்த தலைவன் விரைவில் வருவான் என்பதற்கு ஆலமரத்தில் வாழுகின்ற ஆந்தைகள் அலறுவதும், தும்மல் ஏற்படலும் நன்னிமித்தங்களாகத் தலைமகளுக்குத் தென்பட்டது. இதனை,*

*"மன்ற முதுமரத்து ஆந்தை குரல் இயம்ப*
*குன்றகம், நண்ணி, குறும்பு இறந்து சென்றவர்*
*உள்ளிய தன்மையர் போலும் - அடுத்து அடுத்து*
*ஒள்ளிய தும்மல் வரும்" (ஐந்.எழு.40)*

என்ற பாடல்வரிகள் எடுத்தியம்புகின்றன.

பேய் பற்றிய நம்பிக்கை

எயினர் கொன்று வீழ்த்தியவர்களின் தசையையும் நிணத்தையும் தின்ற பேய்கள் நடுகல்லின் நிழலில் கண்ணுறங்கும் என்ற பாடலின் வழிப் பேய்கள் பிணங்களைத் தின்னும் என அக்கால மக்கள் நம்பிக்கை கொண்டிருந்ததை,

"தடிநிணம் மாந்திய பேஎய் - நடுகல்
விரிநிழல் கண்படுக்கும்" (ஐ.ஐ. 35)

என்ற பாடல் எடுத்துரைக்கிறது.

ஆழி

பழங்காலப் பெண்கள் தாம் தம் தலைவனோடு இணைவோமா? என்பதை அறிந்துகொள்ள மணலின்மேல் ஆழியிடுவர். வட்டம் சரியாகப் பொருந்தினால் தலைவனைச் சேர்ந்துவிடுவோம் என நம்பியதை,

"தாழ்கடல் தண்சேர்ப்பன் தார் அகலம் நல்குமேல்
ஆழியால் காணோமோ யாம்" (ஐ.ஐ. 43)

இப்பாடல் புலப்படுத்துகிறது.

கூடலிழைத்தல்

"பொரிப்புறப் பல்லிச் சீனையீன்ற புன்னை
வரிப்புற வார்மணன்மே லேறித் - தெரிப்புறத்
தாழ்கடற் றண்சேர்ப்பன் றாரகல நல்குமே
லாழியாற் காணோமோ யாம்" (ஐந். ஐ. 43)

என்ற ஐந்திணை ஐம்பது பாடல் ஆழியிழைத்தலைக் கூறுகின்றது. ஆழியைத்தலாகவும் கூடலிழைத்தலாகவும் இருந்த நம்பிக்கை இன்று பூ முடித்தல் திருவுளச் சீட்டுப்போட்டுப் பார்த்தலாக உள்ளதைக் கள ஆய்வின் மூலமாக அறிய முடிகிறது.

இதே செய்தி பாண்டிய மன்னன் மீது காதல் கொண்ட தலைவி ஒருத்தி அவனுடன் கூடுவேனால் கூடுக என்று கூடல் இழைப்பால் செய்து பின்பு அவ்வாறு செய்யாமல் விட்டதை,

"கூடற் பெருமானைக் கூடலார் கோமானைக்
கூடப் பெறுவேனேல் கூடென்று - கூடல்
இழைப்பான்(ள்)போற் காட்டி யிழையா திருக்கும்
பிழைப்பிற் பிழைபாக் கறிந்து." (முத். பா. 31)

என்ற முத்தொள்ளாயிரப் பாடல் வெளிப்படுத்துகிறது.

மேலும், கடவுள் பற்றிய நம்பிக்கைக்கு குறள். 2, பழ. 1 ஆகிய பாடலடிகளும், ஊழ் பற்றிய நம்பிக்கைக்கு குறள். 372, 373, நா. 102, 104, பழ. 125, 203 ஆகிய பாடலடிகளும், நிலையாமை பற்றிய நம்பிக்கைக்கு குறள். 333, 336, நா. 4, 11, 39 ஆகிய பாடலடிகளும் சான்றாக அமைகின்றன.

முடிவுரை

நம்பிக்கை இன்றியமையாத ஒன்று என்பதை நம்பிக்கையே வாழ்க்கை எனும் முதுமொழி விளக்கும். ஒரு சமுதாயத்தின் பண்பாட்டுக் கூறுகளுள் நம்பிக்கை தனியிடம் பெற்றுள்ளது. எல்லா நாட்டுப் பண்பாடுகளிலும் நம்பிக்கை ஒரு கூறாக இருக்கிறது. பல நம்பிக்கைகள் காலம் காலமாகவும் தலைமுறை தலைமுறையாகவும் பின்பற்றப்பெற்று வருகின்றன.நிமித்தங்கள் கதைப்போக்கிற்கு உதவும் வகையில் பின்னிகழ்வை முன்னுணர்த்தக்கூடிய நிலையில் அமைவதைக் காணமுடிகிறது. நிகழ இருப்பதை நினைக்கும் பொருளமைப்பு நினைவோட்ட உத்தியிலிருந்து வேறுபட்டிருப்பினும் இவ்வுத்திக்குரிய அடிப்படையான நினைவோட்டத்தை இக்கட்டுரை கோடிட்டுக் காட்டுகிறது.

துணை நூற்பட்டியல்

1. சாமிநாதையர், உ.வே. பத்துப்பாட்டும் நச்சினார்க்கினியர் உரையும், உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை – 10.
2. துரைசாமி பிள்ளை, ஔவை சு. (உரை), ஐங்குறுநூறு, மற்றும் புறநானூறு, அண்ணாமலை நகர், இரண்டாம் பதிப்பு, 1978.

3. *இராசாராம், துரை. பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள், முல்லை நிலையம், தி.நகர், சென்னை – 17.*
4. *கா. காந்தி, தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும், முனைவர் பட்ட ஆய்வேடு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை –113.*
5. *கோமதி சங்கர், கே.எம்.கே., சமூகவியல் நோக்கில் நீதி இலக்கியம், சரயு பப்ளிகேஷன்ஸ், தென்காசி, முதற்பதிப்பு – 1989.*
6. *இராஜேந்திரன்,முருகு. சகுனம் பார்ப்பது எப்படி?, பாரதி பதிப்பகம், தி.நகர், சென்னை – 17.*
7. *கழகப் புலவர் குழு, கழகத் தமிழ் அகராதி, திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை – 18.*

********* ********* ********** ********* ********* ********** ********** **********